**தி இந்து தமிழ்**
587k பின்பற்றுவோர்

பாலோ

டாஸ்மாக் கடையைத் திறக்கும் போது தட்டச்சுப் பள்ளியை திறக்க அனுமதி மறுப்பது ஏன்?- தமிழக அரசுக்கு உயர் நீதிமன்றம் கேள்வி



16 Jul 20 . 9:38 PM

# தட்டச்சு பள்ளிக்கு நிவாரணம் அரசுக்கு ஐகோர்ட் பரிந்துரை

**மதுரை, ஜூலை 17–** 'தட்டச்சுப் பள்ளிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் அல்லது மீண்டும் துவக்க அனுமதிப்பது குறித்து முடிவெடுத்து, தெரிவிக்க வேண்டும்' என, அரசுக்கு, உயர் நீதிமன்ற கிளை உத்தரவிட்டது.

தமிழ்நாடு தட்டெழுத்து, சுருக்கெழுத்து, கணினி பள்ளிகள் சங்க தலைவர் சங்கர் தாக்கல் செய்த மனு:

கொரோனா ஊரடங்கால் மார்ச், 25ல் இருந்து தட்டச்சு, கணினி பள்ளிகள் செயல்படவில்லை. நீதித்துறை, சட்டசபை, தலைமைச் செயலகம் உட்பட பல அரசுத் துறைகளில் தட்டச்சர், சுருக்கெழுத்தர் பணி இன்றியமையாதது.

[illegible]க் கல்வி [illegible]டம்பரில் தட்டெழுத்து, சுருக்கெழுத்து தேர்வு நடத்துகிறது.

இதில், 1 லட்சத்து, 25 ஆயிரம் மாணவர்கள் பங்கேற்கின்றனர். ஊரடங்கால் வருவாயின்றி கட்டட வாடகை, சம்பளம், மின் கட்டணம், கடனுக்கான வட்டி செலுத்த முடியாத நிலையில், எங்கள் வாழ்வாதாரம் பாதித்துள்ளது.

பல தொழில் பிரிவினருக்கு, ஊரடங்கில் தளர்வு அளிக்கப்பட்டுள்ளது.

எங்களுக்கு ஊரடங்கு நிவாரணமாக மாதம், 30 ஆயிரம் ரூபாய் அரசு வழங்க வேண்டும்.

ஊரடங்கில் தளர்வளித்து, நிபந்தனைகளுடன், தட்டச்சுப் பள்ளிகள் செயல்பட அனுமதிக்க, தமிழக அரசுக்கு மனு அனுப்பினோம். பரிசீலிக்க உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு, மனு செய்தார்.

நீதிபதிகள் எம்.சத்திய நாராயணன், பி.ராஜமாணிக்கம் அமர்வு விசாரித்தது. அரசுத் தரப்பில், 'தட்டச்சுப் பள்ளிகள், கல்வி நிறுவனங்களின் கீழ் வருகிறது. ஊரடங்கால், எவ்வித கல்வி நிறுவனத்தையும் துவக்க அனுமதிக்கவில்லை,' என தெரிவிக்கப்பட்டது.

**நீதிபதிகள் உத்தரவு:** தட்டச்சர்கள் இல்லாமல் அரசின் முக்கிய பணி பாதிக்கும். ஊரடங்கில், 'டாஸ்மாக்' கடைகளை திறக்க அனுமதித்துவிட்டு, தட்டச்சுப் பள்ளிகளுக்கு மட்டும் பாரபட்சம் ஏன்?

தட்டச்சுப் பள்ளிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் அல்லது மீண்டும் துவக்க அனுமதிப்பது குறித்து முடிவெடுத்து, அரசுத் தரப்பில், மூன்று வாரங்களில் தெரிவிக்க வேண்டும்.

இவ்வாறு உத்தரவிட்டனர்.

SHOT ON REDMI 7
AI DUAL CAMERA

# ஊரடங்கில் டாஸ்மாக்கிற்கு அனுமதி தட்டச்சுப் பள்ளிகளுக்கு பாரபட்சம் ஏன்

## உயர்நீதிமன்றம் 'கெடு'

**மதுரை, ஜூலை 17–**

ஊரடங்கில் டாஸ்மாக் கடைகளை திறக்க அனுமதித்துவிட்டு, தட்டச்சுப் பள்ளிகளுக்கு மட்டும் பாரபட்சம் ஏன் என கேள்வி எழுப்பிய உயர்நீதிமன்ற மதுரைக் கிளை, 'தட்டச்சுப் பள்ளிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் அல்லது மீண்டும் துவக்க அனுமதிப்பது குறித்து முடிவெடுத்து அரசுத் தரப்பில் தெரிவிக்க வேண்டும்,' என உத்தரவிட்டது.

தமிழ்நாடு தட்டெழுத்து, சுருக்கெழுத்து, கணினி பள்ளிகள் சங்கம் தலைவர் சங்கர் தாக்கல் செய்த மனு: கொரோனா ஊரடங்கால் மார்ச் 25 லிருந்து தட்டச்சு, கணினி பள்ளிகள் செயல்படவில்லை. நீதித்துறை, சட்டசபை, தலைமைச் செயலகம் உட்பட பல அரசுத் துறைகளில் தட்டச்சர், சுருக்கெழுத்தர் பணி இன்றியமையாதது. தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் செப்டம்பரில் தட்டெழுத்து, சுருக்கெழுத்து தேர்வு நடத்துகிறது. இதில் 1 லட்சத்து 25 ஆயிரம் மாணவர்கள் பங்கேற்கின்றனர். ஊரடங்கால் வருவாயின்றி கட்டட வாடகை, சம்பளம், மின் கட்டணம், கடனுக்கான வட்டி செலுத்த முடியாத நிலையில் எங்கள் வாழ்வாதாரம் பாதித்துள்ளது.

பல தொழில் பிரிவினருக்கு ஊரடங்கில் தளர்வு அளிக்கப்பட்டுள்ளது. எங்களுக்கு ஊரடங்கு நிவாரணமாக மாதம் தலா ரூ.30 ஆயிரம் அரசு வழங்க வேண்டும். ஊரடங்கில் தளர்வளித்து நிபந்தனைகளுடன் தட்டச்சுப் பள்ளிகள் செயல்பட அனுமதிக்க தமிழக அரசுக்கு மனு அனுப்பினோம். பரிசீலிக்க உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு சங்கர் மனு செய்தார்.

நீதிபதிகள் எம்.சத்தியநாராயணன், பி.ராஜமாணிக்கம் அமர்வு விசாரித்தது. அரசுத் தரப்பில், 'தட்டச்சுப் பள்ளிகள் கல்வி நிறுவனங்களின் கீழ் வருகிறது. ஊரடங்கால் எவ்வித கல்வி நிறுவனத்தையும் துவக்க அனுமதிக்கவில்லை,' என தெரிவிக்கப்பட்டது.

நீதிபதிகள்: தட்டச்சர்கள் இல்லாமல் அரசின் முக்கிய பணி பாதிக்கும். ஊரடங்கில் டாஸ்மாக் கடைகளை திறக்க அனுமதித்துவிட்டு, தட்டச்சுப் பள்ளிகளுக்கு மட்டும் பாரபட்சம் ஏன், தட்டச்சுப் பள்ளிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் அல்லது மீண்டும் துவக்க அனுமதிப்பது குறித்து முடிவெடுத்து அரசுத் தரப்பில் 3 வாரங்களில் தெரிவிக்க வேண்டும், என்றனர்.

கொரோனா ஊரடங்கில் டாஸ்மாக் கடைகள் திறந்து இருக்கும்போது

# தட்டச்சு பள்ளிகளை ஏன் திறக்க அனுமதிக்க கூடாது?

## தமிழக அரசுக்கு, மதுரை ஐகோர்ட்டு கேள்வி

மதுரை, ஜூலை.17–

தமிழ்நாடு தட்டச்சு, சுருக்கெழுத்து பள்ளிகள் சங்கத்தலைவர் சோம.சங்கர், மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருந்ததாவது:–

கொரோனா பரவலை தடுக்க ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டபோது தட்டச்சு பள்ளிகள் மூடப்பட்டன. அவை தற்போது வரை மூடியே கிடக்கின்றன. ஊரடங்கில் பல்வேறு தளர்வுகள் வழங்கப்பட்டு தொழிற்சாலைகள், நிறுவனங்கள் இயங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தட்டச்சு பள்ளிகள் இயங்கினால் தான் அரசு பணிக்கு தகுதியான தட்டச்சர்கள் மற்றும் சுருக்கெழுத்தர்களை உருவாக்க முடியும். எனவே, தட்டச்சு பள்ளிகளை திறக்க அனுமதி வழங்க உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டு இருந்தது.

இந்த வழக்கு நீதிபதிகள் சத்தியநாராயணன், ராஜமாணிக்கம் ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, அரசு வக்கீல் ஆஜராகி, தட்டச்சு பள்ளிகள் கல்வி நிறுவனங்களின் பட்டியலில் வருகிறது. அதனால் அவற்றை திறப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என தெரிவித்தார். அதற்கு நீதிபதிகள், "கொரோனா ஊரடங்கில் டாஸ்மாக் கடைகளை திறந்து இருக்கும் போது, தட்டச்சு பள்ளிகளை ஏன் திறக்கக்கூடாது?" என கேள்வி எழுப்பினர்.

முடிவில், "தட்டச்சு பள்ளிகளை திறக்க அனுமதி வழங்குவது தொடர்பாக, தமிழக அரசு 3 வாரத்தில் முடிவு எடுக்க வேண்டும்" என நீதிபதிகள் உத்தரவிட்டனர்.